**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 362/2019 P.W.3 / LW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சசிக்குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : | நடராஜன் | **Calling** | : | |
| **Village** | : | கோட்டகம் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 49 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.01.2024**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் சிஅர்சி நடத்துனராக வேலை பார்க்கிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அசா.1 என்னுடைய Duty driver ஆவார். கடந்த 18.04.2019 இரவு 08.30 மணிக்கு சந்தப்பேட்டை பேருந்து நிலையத்தில் என்னுடைய பேருந்தை நாங்கள் நிறுத்தியபோது அங்கியிருந்த மூகாம்பிகை என்ற தனியார் பேருந்தின் நடத்துனரான தாஸ் (எ) இலக்கியதாசன் என்பவர் தனியார் பேருந்தின் எடுக்கும் நேரம் முடிந்து பேருந்து நிலையத்தில் அவர்களுடடைய பேருந்தை நிறுத்தினார்கள். அப்போது எங்களது அரசு பேருந்து டிரிப் எடுக்கம் நேரம் என்பதால் நாங்கள் பேருந்து நிலையத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றிக்கொண்டு இருந்தோம். அப்போது தாஸ் என்பவர் அரசு பேருந்தின் ஓட்டுனரை பார்த்து தேவடியா மவனே, குச்சிக்காரி மவனே என்றல்லாம் திட்டி, எங்கள் பேருந்து வருவதற்குள் உங்கள் அரசு பேருந்தை ஏன் எடுத்தியிர்கள் என்று திட்டி, அரசு பேருந்தின் ஓட்டுனரான அசா.1 ஐ இடது கன்னத்தில் அறைந்து காலால் நெஞ்சில் எட்டி உதைத்தார். தனியார் பேருந்தின் ஓட்டுனர் பேருந்தில் உள்ள இரும்பு ஜாக்கி லிவரை எடுத்து அசா.1 ன் முட்டிகாலிலும், இடது கை மோதிர விரலிலும் அடித்தார்.

2) அசா.1 ன் இடது கை மோதிர விரலில் இரத்தகாயம் ஏற்பட்டது. அவர் மயக்க அடைந்து விட்டார். உடனே மன்னார்குடி அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தார்கள். அங்கு அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் 5 நாட்கள் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** : **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) சந்தப்பேட்டை பேருந்து நிலையம் என்பது கிழக்கு மேற்கான பேருந்து நிலையம் . பேருந்து நிலையம் சுற்றி ஏறத்தாழ 50,60 கடைகள் இருக்கும் என்றால் - சரிதான். பேருந்து நிலையம் எப்போது கூட்டமாக உள்ள இடம் என்றால் - சரிதான்.

2) பேருந்து நிலையத்தில் சம்பவ இடத்தில் 200, 300 மேற்பட்ட நபர்கள் இருந்தார்கள்என்றால் - சரிதான். எங்கள் பேருந்திலும் 30,40 நபர்கள் இருந்தார்கள் என்றால் - சரிதான். அனைவருக்குமே இந்த சம்பவத்தை பார்த்தார்களா என்றால் - பார்த்தார்கள்.

3) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி1 பவானந்தம், 2 ஆகிய நான், 3 முருகானந்தம், 4 சுதாகர் ஆகிய நான்கு பேர்களுமே அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து வருபவர்கள் என்றால் - சரிதான். அசா.1 என்னுடைய நண்பர் என்றால் - சரிதான்.

4) பேருந்து எப்போது நேரம்ஒதுக்க வேண்டும் என்பதெல்லாம் அரசு போக்குவரத்து கழகத்துனுடைய டிரிப் சீட்டில் இருக்கும் என்று சொன்னால் - சரிதான். அலுவலர்களை விசாரித்தால் யாருக்கு முன்னாடி டிரிப் இருக்கும் என்ற விபரம் தெரியும் என்றால் - சரிதான்.

5) நான் போலீசார் வாக்குமூலத்தில் நான் ஒன்றும் டயத்துக்கு டிரிப் எடுக்க மாட்டியா என்று எதிரிகள் திட்டியதாக கூறினேனா என்றால் - இல்லை. அரசு ஊழியர் பொய் சாட்சி சொல்லக்கூடாது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் - சரிதான். பொய் சாட்சி தண்டனை உள்ள குற்றம் என்பது எனக்கு தெரயாது.

6) எங்களுடைய பேருந்து அரசாங்கம் எங்களுக்கு ஒதுக்கிய நேரத்ததில் பேருந்தை எடுக்காமல் காலதாமத படுத்தியது என்று சொன்னால் - சரியல்ல.

7) உண்மை நிலையை மறைத்து முதல் விசாரணையில் ஒரு சங்கதியை ஜோடித்து உள்ளீர்கள் என்றால் - சரியல்ல. அதனால் எனக்கு சம்பவம் தெரியாதததால் முன்னுக்கு பின்னாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

8) சம்பவம் சுமார் 20 நிமிடங்களுக்கு மேலாக நடந்து கொண்டியிருந்து. அசா1 டன் மனைவி காவல் நிலையத்தில் பணிபுரிகிறார். சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து விட்டார்கள். சம்பவ இடத்தில் போலீசார் விசாரித்தார்கள் என்றால் - சரிதான். சம்பவ இடத்தில் சுதாகர் இருந்ததால் அவரிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுவிட்டனர்.

9) எஸ்எம்டி ஜயா ஸ்வீட்ஸ் எதிர்பக்கத்தில் பஸ்ஸை நிறுத்தியிருந்தோம் என்றால் - சரிதான். இரவு 08.30 மணிக்கு ஒரே சத்தம். நான் ஓடிபோய் பார்த்து அசா.1 க்கு சட்டையெல்லாம் ஒரே இரத்தம்.

10) சம்பவ காலத்தில் SMT கடை வடக்கு தெற்கான ரோட்டில் வீரா சிலக்ஸ் எதிரே கிழக்கு பக்கம் பார்த்து கடை இருந்ததா என்றால் - சரிதான்.

11) நான் இந்த வழக்கில ஜோடிக்கப்பட்ட சாட்சி எனக்கு சம்பவம் நேரிட்டு தெரியாது என்றும், அசா.1 என்பவர் எனக்கு நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாகபொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. அதனால் தான் பேருந்து நிலையத்தில் உள்ள SMT கடை எதிரில் பேருந்து நின்றதாக பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>அரசு தரப்பில் மறுவிசாரணை</u>**

1) போலீசார் சம்பவ நேரத்தில் சம்பவத்தை பற்றி என்னிடம் போலீசார் விசாரித்தார்கள். சுதாகரிடமும் விசாரித்தார்கள். அப்போது எங்களிடம் எந்த கையெழுத்து வாங்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றும், அதனால் தான் முன்னுக்கு பின் முரணாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/------

M. Sureshkarthik,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 362/2019 P.W.4 / LW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சுதாகர் | **Caste** | : | |
| **Father's Name** | : | வேலன் | **Calling** | : | |
| **Village** | : | நெய்வாசல் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 43 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.01.2024**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் சிஅர்சி நடத்துனராக வேலை பார்க்கிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் மூகாம்பிகை தனியார் பேருந்தின் டிரைவர் மற்றும் நடத்துனர்கள் ஆவார்கள். அசா.1 அரசு பேருந்தின் driver ஆவார். கடந்த 18.04.2019 ஆம் தேதி இரவு 08.30 மணிக்கு 473 பி என்ற அரசு பேருந்தை டிரிப் எடுப்பதற்காக அவர்களுடைய நேரத்தில் எடுக்க முற்பட்டாரகள். மூகாம்பிகை தனியார் பேருந்தில் டிரிப் டையம 08.20 ஆகும். அவர்களுடைய நேரம் முடிந்து விட்டது. அதற்கு பிறகு அரசு பேருந்தின் டிரிப் நேரம் தான்.

2) அரசு பேருந்து டிரிப் எடுக்கும் நேரத்தில் தனியார் பேருந்தை இயக்கி வந்து பேருந்து நிறுத்ததில் நிறுத்தினார்கள். அப்போது எதிரிகள் அசா.1 ஐ பார்த்து எங்கள் தனியார் பேருந்து சென்ற பிறகு தான் அரசு பேருந்து எடுக்க வேண்டும் என சத்தம் போட்டார்கள். தேவடியா மவனே, குச்சிகாரி மவனே என்றெல்லாம் திட்டினார்கள். அப்போது அரசு பேருந்தின் இருக்கையில் இருந்த அசா.1 ஐ இலக்கியதாஸ் கன்னத்தில் அறைந்து கீழே தள்ளிவிட்டு மார்பில் உதைத்தார். அப்போது அங்கு வந்த தனியார் பேருந்தின் ஓட்டுனர் சுரேஷ் என்பவர் பேருந்தில் இருந்த ஜாககி லிவரை எடுத்து அசா.1ன் முழகாலிலும், இடது கை மோதிர விரலிலும் அடித்தார். கையில் வீக்க காயம் ஏற்பட்டது. இரத்த காயமும் ஏற்பட்டது.

3) பிறகு அங்-கு கூட்டம் கூடியது. அசா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :1வது **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். 2வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரின்மை காரணமாக மனு அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) சம்பவ நேரத்தில் எங்களுடைய பேருந்து ராசி டிரைவிங் ஸ்கூல் எதிரே 50 அடி தூரத்தில் எங்களுடைய பேருந்து இருக்கும் என்றால் - சரிதான். எங்கள் பேருந்திற்கு பக்கத்தில் நாகப்பட்டினம் அரசு பேருந்து 10 அடி தூரத்தில் இருந்தது. அசா.1ன் வண்டி 10 அடி தூரத்தில் இருந்தது என்றால் - சரிதான்.

2) சம்பவ நேரத்தில் என்னுடைய பேருந்து இரவு 08.45 மணிக்கு புள்ளவராயன் குடிகாடு டிரிப்ப இருந்தது என்றால் - சரிதான். மன்னார்குடியில் இருந்து புள்ளவராயன் குடிகாடடிற்கு கடைசி பேருந்து எ்னறால் - சரிதான். அதனால் கூட்டமாக இருந்தது என்றால் - நார்மலாக தான் இருந்தது. சுமார் 35, 40 தபேர்கள் பேருந்தில் இருந்தார்கள்.

3) என்னுடைய பேருந்துக்கு தெற்கு புறம் அசா.1ன் பஸ் இருந்தது என்றால் - சரிதான். சம்பவம் சுமார் 10 ல் இருந்து 15 நிமிடம் நடந்தது.

4) எதிரிகள் அசா.1 ஐ டயத்து பஸ் டிரிப் எடுக்க மாட்டியா என்று கூறினார்கள் என்று நான் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் - கூறினேன். சம்பவ நேரத்தில் எதிரிகள் வாகனத்துடைய ஒதுக்கப்பட்ட நேரம் தான் என்றும், அசா.1 பேருந்தின் நேரம் முடிவுற்று காலதாமதமாக இயக்கினார் என்று சொன்னால் - சரியல்ல.

5) சம்பவ நேரத்தில் நான் நடத்துனர் பணியில் இருந்தேன் என்றால் - இல்லை. நான் என் வாகனத்திற்கு முன் நின்று கொண்டியிருந்தேன். ஜாக்கி ராடு சுமார் 5 அடி இருக்கும். போலீசார ராடு எல்லாம் பார்த்தார்கள் என்றால் - சரிதான். அசா.1க்கு சட்டை எல்லாம் இரத்தம் என்றால் - சட்டை கிழிந்து இருந்தது. காலில் தான் இரத்தம்.

6) அசா.1ன்கிழிந்த சட்டையை போலீசார் வழக்கிற்காக பெற்றுக்கொண்டார்களா என்றால் - இல்லை. சம்பவம் நடந்து கொண்டியிருக்கும்போது காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள் என்றால் - சம்பவம் முடிந்து 10 நிமிடங்களுக்கு மேல் போலீஸ் வந்து விட்டார்கள். அசா.1 ன் மனைவி காவல் துறையில் சம்பவ நேரத்தில் பணியில் இருந்தாரகளாரஎன்றால் - அவர் போலீஸ் என்று தெரியும். அன்றைய தினம் அவர் பணியில இருந்தாரா என்று எனக்கு தெரியாது.

7) சம்பவம் எனக்கு நேரிட்டு தெரியாது. நான் ஜோடிக்கப்பட்ட சாட்சி என்றால் - சரியல்ல. எங்களுக்கு மு்னனால் மற்றொரு பேருந்து இருந்தால் சம்பவத்தை நேரிட்டு பார்க்க முடியாது என்றால் - சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து

காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/------

M. Sureshkarthik,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.